Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 161

National Tamil Daily தேசிய தினசரி

(23-7-65)

விசுவாவசு ஆடி 8 ஏபி: அவ் பிறை 23 வெள்ளிக்கிழமை

நீடித்த பாவனைக்கு

சொனென்ஷீன் சொனென்ஷீன்



பற்றறிகளையே உபயோகியுங்கள்

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:-

துரை அன் கோ

23/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## உஷார்!

### ஆசிரியர் மீது மந்திரி நடவடிக்கை

கொழும்பு வியாழன்

பாடசாலைக்கு நேரம் தாமதித்துப் போகும் ஆசிரியர்கள் மீதும், லீவு பெறாமல் பாடசாலைக்குச் செல்லாதிருக்கும் ஆசிரியர்கள் மீதும் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கிறது

இந்த ஆசிரியர்கள் இனிமேல் இதற்கான தகுந்த காரணங்கள் காட்டுமாறு கோரப்படுவர் தகுந்த காரணம் காட்டத் தவறுவோர் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு கல்வி இலாகாவுக்கு அனுப்பிவைத்துள்ள உத்தரவொன்றில் கல்வி மந்திரி அறிவித்துள்ளார் ஆசிரியர்களின் வருகை குறித்து திடீரெனப் பரிசோதனை செய்யவென சில உத்தியோகஸ்தர்களை நியமிக்கவும் மந்திரி முடிவு செய்துள்ளார் இவர்கள் பாடசாலைகளுக்கு திடீரென விஜயம் செய்து ஆசிரியர்கள் கையொப்பமிடும் புத்தகங்களை பரிசோதிப்பார்கள்

பல பாடசாலைகளில் ஆசிரியர்கள் நேரம் தாமதித்துவருவதாலும், லீவு பெறாமல் பாடசாலைக்கு வராதிருப்பதாலும், பாடசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவசியமற்ற காரணங்களுக்காகவே இவர்கள் இவ்வாறு நடந்துகொள்கிறார்களென இலாகா, மந்திரியிடம் முறையிட்டிருந்தது

# புதிய பட்ஜட் ஆகஸ்ட் 9-ல்

## உலக வங்கியிடமிருந்து பெரும் உதவி கிடைக்கும்?

கொழும்பு, வியாழன்

**தேசிய அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவுத்திட்டம் (பட்ஜட்) அடுத்த மாதம் 9-ம் திகதி பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும். பட்ஜட்டைச் சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதங்களுக்கு இலங்கைக்கு வெளிநாடுகளிடமிருந்து கிடைக்கும் உதவிகள் சம்பந்தமாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் தவக்கமே காரணம் எனக் கூறப்படுகிறது.**

ஜூலை மாதம் 29-ம் திகதி பட்ஜட் சமர்ப்பிக்கப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. அடுத்த மாதம் 5-ந் திகதி என பின்னர் அறிவிக்கப்பட்டபொழுதிலும் இப்பொழுது ஆகஸ்ட் 9-ம் திகதியே புதிய வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் எனக் கூறப்படுகிறது'

### வெளிநாட்டு உதவிகள்

இலங்கையை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிகளைத் தவிர்க்கும் பொருட்டு அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மன், அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, ஜப்பான் ஆகிய நாடுகள் நிதி உதவிகள் அளிக்க முன்வந்திருக்கின்றன.

இலங்கைக்கு உலக வங்கி பெரிய அளவில் நிதி உதவி அளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பட்ஜட் தினத்தன்று வெளிநாடுகளிடமிருந்து பெறும் உதவிகள் சம்பந்தமாக அறிக்கையொன்று பார்லிமெண்டில் வெளியிடப்படும்.

## "மூச்சு!"

கொழும்பு, வியாழன்

மந்திரிசபையின் கூட்டம் இன்று பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா தலைமையில் நடைபெற்றது.

மந்திரிசபையின் முடிவுகளை உடனடியாக வெளியிடக்கூடாதென்றும் தாறுமாறாக வெளியிடுவதனால் நிலைமையில் குழப்பம் ஏற்படுகிறதென்றும் பிரதமர் மற்றைய மந்திரிகளுக்கு தெரிவித்துள்ளார்.

மந்திரிசபையின் முடிவுகள் குறித்து மந்திரிகள் "மௌன விரதம்" அனுஷ்டிக்கவேண்டுமென்று பிரதமர் அவர்களைக் கோரியுள்ளார்.

## உச்சியில் சத்தியாக்கிரகம்!

கொழும்பு, வியாழன்

களனியவிலுள்ள எஞ்ஜினியரிங் கார்ப்பரேஷனில் வேலை செய்யும் தொழிலாளர்கள் இருவர் இன்று புதுவிதமான சத்தியாகிரகத்தில் ஈடுபட்டனர்.

சில நாட்களுக்கு முன்னர் 4 தொழிலாளர்கள் மின்சாரத்தினால் தாக்குண்டு மரணமானார்கள், தங்களுக்கு சரியான பாதுகாப்புவேண்டும் என்று இரு தொழிலாளர்கள் (சுதந்திரக்கட்சி யூனியன்) சத்தியாக்கிரகம் செய்தனர். ஒருவர் "டவரிலும்" (கோபுரம்) மற்றொருவர் "ஏரியலிலும்" ஏறியிருந்துகொண்டு இறங்க மறுத்துவிட்டனர்

## காங்கேசன்துறைக்கு லக்சபான மின்சாரம்

யாழ்ப்பாணம், வியா

லக்சபான மின்சார சக்தியை காங்கேசன்துறைக்கு தொடர்புபடுத்துவதற்கான முதல் கட்டத்துக்கு மந்திரிசபை அங்கீகாரம் வழங்கியுள்ளது!

இதற்கென ரூபா 11 கோடியே 70 லட்சம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது, இது மின்சாரக் கம்பிகளுக்கு மாத்திரம் செலவிடப்படும் தொகையென அறியப்படுகிறது.

## "இராணுவத்தினர், தீவைத்து விட்டு மன்னிப்புக் கேட்டனர்"

### இராணுவத்தாக்குதல் வழக்கில் சாட்சியம்

சாவகச்சேரி, வியாழன்

பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இயக்கச்சி இராணுவத் தாக்குதல் வழக்கு சாவகச்சேரி மஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. ஜெபேர்ட் சில்வா முன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சின்னப்பு மரியாம்பிள்ளை சாட்சியமளித்தார். அவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது-

"சம்பவம் நடந்த அன்று மத்தியானம் நான் தாளையடியில் இருந்த எனது கடைக்குப் பக்கத்திலிருந்த வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன் அச்சமயம் கடையிலிருந்த எனது மனைவி ஓடிவந்து இராணுவத்தினர் வீதிகளிலுள்ள கிராமவாசிகளை அடித்துக் கொண்டு வருகிறார்கள் என்று சொல்லிக் கடைத்தட்டியைப் பூட்டுவோம் என்றார். நான் பூட்டும்படி சொன்னேன், அவர் பூட்டிவிட்டு என்னைக் கடைக்குப் போக வேண்டாம் என்று சொல்லிவிட்டு இரண்டுபிள்ளைகளுடன் ஒரு அறைக்குள் பூட்டிக் கொண்டு ஒளித்திருந்தார் நான் சாப்பாட்டைவிட்டு எழுந்து எனது இரு சிறுபிள்ளைகளுடன் தாவாரத்திலிருந்த ஒரு தும்புக்கட்டுக்கு மேல் மறைந்திருந்தேன். இராணுவத்தினர் கடையினுள் நுழைந்து பொருட்களைச் சேதப்படுத்தும் சத்தம் கேட்டது. நான் இருந்த இடத்திலிருந்து அவர்களை கண்டேன். அவர்களில் 8, 10 பேர் நின்றனர் அவர்கள் என்னைக் காணவில்லை. கடையில் இருந்து வெளியே விறுந்தை வழியே வந்து வளவினுள் நுழைந்து அங்கிருந்த கோழிக்கூட்டுக்குச் சென்று கோழிகளைப் பொல்லால் அடித்தனர். கோழிகள் சத்தம் போடுவது எனக்குக் கேட்டது. அந்த வளவிற்குள் வேறு ஒரு வீட்டில் வசித்துவந்த எனது ககவினமுள்ள மாமாவிற்கும் அவர்கள் அடித்தனர். ஒரு இராணுவவீரர் எனது வீட்டின் ஒரு அறைக்குள் நுழைந்ததையும் கண்டேன். அவர் 5 நிமிடங்களின் பின்னர் அறையை விட்டு வெளியேறிவிட்டார். பின்னர் எல்லா இராணுவ வீரர்களும் ஒன்றுகச் சேர்ந்து வீட்டின் பின்பக்க தாவாரத்திற்கு நெருப்பு வைத்தனர்

### மன்னிப்புக் கேட்டனர்

உடனே நான் அவர்களிடம் போய் "ஏன் இப்படிச் செய்கிறீர்கள். இது அபாயமல்லவா? உள்ளே எனது பிள்ளைகளும் மனைவியும் இருக்கிறார்கள்" என்று கூறினேன், அந்த இராணுவத்தினர் மன்னிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு போய்விட்டார்கள், அவர்கள் போனதும் நானும் பிள்ளைகளும் சேர்ந்து தீயை அணைத்துவிட்டோம். அங்கு வந்தவர்கள் இராணுவத்தினர் என்பதைத் தவிர அவர்களைப் பற்றி வேறொன்றும் தெரியாது.

(5ம் பக்கம் பார்க்க)

## வடக்கே வரும் மகாவலிகங்கை

### 1967-ல் திட்டம்

யாழ்ப்பாணம்: வியா.

மகாவலிகங்கையை வடக்கு மாகாணத்துக்கு திருப்புவது பற்றி இங்கு ஆராய்ந்து வரும் ஐ.நா. நிபுணர்கள் குழு தனது அறிக்கையை 1967-ம் வருடத்தில் சமர்ப்பிக்குமென அறியப்படுகிறது. இந்த அறிக்கையைப் பொறுத்தே இத்திட்டம் அமுல் நடத்துவது பற்றிமுடிவு செய்யப்படுமெனவும் தெரியவருகிறது,

இந்த நிபுணர்குழுவுக்கு இலங்கையைச் சேர்ந்த 20 எஞ்ஜினியர்களும் 150 சர்வேயர்களும் இதுவ்விஷயத்தில் உதவிபுரிந்து வருகிறார்கள்.

## 35,000 ரூபா பொருள்களும் 65,000 ரூ. வள்ளமும் பறிமுதல்

### 6 பேருக்கு 45,000 ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வல்வெட்டித்துறையிலிருந்து இந்தியாவுக்கு கடத்திச்செல்லப்பட்ட 35,800 ரூபாய் பெறுமதியான 25 மூடைகள் சாராயமும், 25 மூடைகள் சாதிக்காயும் 65,000 ரூபாய் பெறுமதியான வள்ளமும் கைப்பற்றப்பட்டுள்ளன, கடத்தலில் சம்பந்தப்பட்ட ஆறு பேருக்கு 45 000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது

இக்கள்ளக்கடத்தல் முயற்சியைக் கடற்படையினர் நேற்று ஆழ்கடலில் முறியடித்தனர், கடத்தற்பொருள் ஆறு பேர்களும் சுங்க இலாகா அதிகாரி திரு எம் வீரசுந்தரம் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர். கள்ளக்கடத்தலை லெப்டினண்ட் அண்டிரீஸ் முறியடித்தார். இதுசம்பந்தமான விசாரணையை திரு வீரசுந்தரம் நடத்திய பின்னர் யாழ்ப்பாணம் சுங்கப்பகுதிக்

(6-பக்கம் பார்க்க)

## கல்வி மந்திரி இன்று வருகிறார்

### பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்

யாழ்ப்பாணம், வெள்ளி

கல்வி கலாச்சார மந்திரி திரு. ஐ. எம் ஆர். ஏ. இரியகொலேயும், அவரது பாரியாரும், இன்று நண்பகல் யாழ்தேவி மூலம் யாழ்ப்பாணப் புகையிரதநிலையத்தை வந்தடைவார்கள்,

நாளை காலை 8-30 மணிக்கு கல்வி மந்திரி திரு இரியகொலே நல்லூர் தொழில் நுட்ப கல்லூரிக்கு விஜயம் செய்வார். அங்கிருந்து காலை 10 மணிக்கு பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலைக்கு விஜயம் செய்வார். காலை 11 மணிக்கு உடுப்பிட்டியிலுள்ள புறநிலை பாடசாலைக்கு விஜயம் செய்வார், பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் திரும்புவார்.

மாலை 3 மணிக்கு சைவ பரிபாலன சபையினரை சந்திப்பார் மாலை 4 மணிக்கு சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தின் அதிபரும் ஆசிரியர்களும், அளிக்கும் விருந்துபசாரத்தில் கலந்து கொள்வார்.

மாலை 5 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க்கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார், மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் நடைபெறும் தேசிய நடன சங்கீத விழாவிற்கு தலைமை தாங்குவார். இரவு 9 மணிக்கு அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் அளிக்கும் இரவு போசன விருந்தில் கலந்து கொள்வார்.

25-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு பாடசாலை அதிபர்கள் சங்கத்தினரை சந்திப்பார். காலை 9 மணிக்கு தேசிய சங்கீத நடன விழாவிற்கு தலைமை தாங்குவார். பகல் 12 மணிக்கு யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் மந்திரிக்கு மத்தியான போசன விருந்தளிப்பார்.

மாலை 3 மணிக்கு கோப்பாய் மகாவித்தியாலய விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வார்.

மாலை 3-30 மணிக்கு நவா மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வார். மாலை 5 மணிக்கு வைத்தீஸ்வர வித்தியாலய பெற்றோர் தின விழாவில் கலந்து கொள்வார். இரவு 7-30 மணிக்கு

(5-ம்பக்கம் பார்க்க)

மணிவாசகம்

நன் என்றும் அசம்பாவிதமே வினை வருத்தத்தைக் கொடுக்கிறது.
— ஞானவாசிட்டக்கருத்து

# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna.
Grams: "EELANADU" Jaffna
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு
ஆடி 8 23-7-65

## நகரின் சுகாதாரம்

யாழ்ப்பாண நகரில் மாதிரிச் சந்தை, புதிய பஸ் நிலையம் ஆகியவை அமைப்பது பற்றியும் நகரை வலயங்களாகப் (ஸோன்) பிரிப்பது பற்றியும் ஸ்தலஸ்தாபன மந்திரி நகர, பட்டின திட்ட அமைப்பாளர் ஆகியோருடன் யாழ்ப்பாண நகர மேயர் சமீபத்தில் ஆலோசனை நடத்தியிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் பஸ் நிலையம் உள்ள சீர்கேடான நிலை பற்றியும் பிரயாணிகளும் பொதுமக்களும் பஸ் நிலையத்தில் படும் அவதியையும் நாம் இப்பத்திகளில் இதற்கு முன் பல தடவைகளிலும் எடுத்துக்காட்டி பஸ் நிலையம் ஒன்று நல்ல முறையில் அமைக்கப்படவேண்டிய அவசியத்தையும் சுட்டிக்காட்டியிருக்கிறோம். மாதிரிச் சந்தை அமைக்க அஸ்திவாரமிடப்பட்டதுடன் நிற்கிறது. நகருக்கு ஒரு நவீன சந்தை அவசியமென்பதையும் மக்கள் ஏற்றுக்கொள்வர். மேயரின் ஆலோசனையும் முயற்சியும் பயன் அளிக்கவேண்டும்.

ஆனால் நகருக்கு மாதிரிச் சந்தையும் பஸ் நிலையமும் அமைத்து நகரை வலயங்களாகப் பிரிப்பதுடன் நகரம் முன்னேற்றமடைந்து விடாதென்பதையும் நகரைச் சுகாதாரமாகவும் சுத்தமாகவும் வைத்திருக்கவேண்டியது மிக அவசியமென்பதையும் இதற்கு நகர மேயர், மாநகரசபை அங்கத்தவர்கள், ஊழியர்கள் மட்டுமல்ல பொதுமக்களும் உதவி புரியவேண்டியது அவசியமென்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

யாழ்ப்பாணம் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு நகரம். தமிழரின் தலைநகரமென்றும் பெருமையாகச் சொல்லிக்கொள்கிறோம். தமிழர்கள் சுத்தமானவர்களென்றும் பெருமை பேசுகிறோம். யாழ்ப்பாண நகரைப் பார்ப்பவர்கள் இது உண்மைதானா என்று ஐயம் கொள்வார்கள். இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமெனவும் நாம் பெருமையுடன் கூறிக்கொள்ளும் யாழ்ப்பாண நகரிலுள்ள ஒழுங்கைகள் பலவும், அவற்றிற்கு மாநகரசபை பெயர் சூட்டியிருந்திருந்தாலும் கூட சில 'வசித்திரமான' பெயர்கள் நிலைத்து நிற்கின்றன. இவை காரணப் பெயர்கள். இந்த ஒழுங்கைகளில் குப்பை திட்டிகளும், கசலமும்தான் கண்ணுக்கும் மூக்குக்கும் காட்சியளிக்கும். ஒழுங்கைகளில் மட்டுமல்ல, பிரதான வீதிகளிலும் சிறிய வீதிகளிலும் குப்பைகளும் அதனால் ஏற்பட்ட குப்பைத் திட்டிகளும் நிலைபெற்றுக் காட்சியளிக்கின்றன. இத்

தொட்டிகளில் சில இடங்களில் சில சமயங்களில் கோழி இறந்த பிராணிகளின் சடலங்களும் சில தினங்களுக்கு நாற்றமடித்துக் கொண்டிருக்கும். புதிதாக வீடு, கடை முதலிய கட்டிடங்கள் கட்டுவோர் கல், மண் முதலியவற்றையும் வீதியோரத்திலேயே குவித்தும் வைத்திருப்பர். கால்வாய் நாற்றம் பற்றியும் ஒழியாத நுளம்புத் தொல்லை பற்றியும் இனியும் குறிப்பிடுச் சொல்லத் தேவையில்லை.

நகரத்தில் வாழும் மக்கள் வீட்டில் சேரும் குப்பை கூழங்களை வீதியில் வீசாமல் தங்கள் வளவுக்குள்ளேயே குழி தோண்டிப் புதைத்தால் வளவில் பயிர்கள், செடிகள், செய்கை பண்ணை உரமாக உதவும். சுகாதாரத்துக்கும் குந்தகம் சேராது. வளவுக்குள் புதைக்க வசதியில்லாதவர்கள் தங்கள் வீட்டு வாசலருகில் பீப்பாய், அல்லது வாளி வைத்து அவற்றில் குப்பை களைப் போடலாம், நகர சுத்தித்தொழிலாளர் இவற்றை தினசரி அகற்றலாம். இவ்விதம் பொதுமக்கள் நகரின் சுகாதாரத்தையும் சுத்தத்தையும் பாதுகாப்பதற்கு உதவி செய்ய முடியும்.

இதேசமயம் மேயரும் மாநகரசபை அங்கத்தவர்களும் சபைக் கூட்டம் 'நகரின் கற்று' பற்றி 'வாய்ப்பேச்சில்' காலத்தைக் கழிப்பதை விடுத்து ஊழியருடன் நேரடியாகவே ஒவ்வொரு வட்டாரத்துக்கும் தவணை குறிப்பிட்டுச் சென்று நகரை சுத்தமாக வைத்திருக்கும் இயக்கத்தில் ஈடுபடலாம், இதற்கு ஒத்துழைப்பும் உதவியும் தான் தேவை.

# வரட்சியைப் போக்க தெய்வ வழிபாடு

தமபதேனியா, வியா.

குருநாகலில் கடந்த 12 மாத காலமாக நிலவிவரும் வரட்சி காரணமாக பயிர்ச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட கன்ட்ராக்டரால் தண்ணீர் இங்கு லொறி மூலம் விநியோகிக்கப்படுகிறது. இங்குமக்கள் தண்ணீர்க் கஷ்டத்தால் பெரிதும் அவதிப்படுவதாகவும் தெரிகிறது.

சென்ற வருட செப்டம்பர் மாதத்திலிருந்து இங்கு மழை பெய்யாததால் குளங்களிலும் கிணறுகளிலும் தண்ணீர் வறந்து பாலைவனம் போல் காட்சியளிக்கிறது.

இங்கிருந்த நிலை நீடித்தால் குடிப்பதற்கே தண்ணீர் கிடைக்காது போய்விடுமோ என தம்பதேனியா பகுதியிலுள்ள மக்கள் அஞ்சுகின்றனர், சிறுபோக நெல் விளைச்சலை வரட்சி பாதித்துவிட்டது.

வரட்சியைப் போக்கி மழை பெய்யச் செய்வதற்காக தக்க காலத்தில் உதவி அரசாங்கம் அதிபர் திசமகாவிகாரையின் பிரதான குருவின் உதவியுடன் அடுத்த மாதம் 11ந் திகதி தெய்வ வழிபாடு நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றார்.

## உப தபாலதிபர்கள் கூட்டம்

சுழிபுரம், வியாழன்

அகில இலங்கை தமிழ்பேசும் உப-தபாலதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் விசேஷ கூட்டம் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் வருகிற ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது. வடசிழக்கு மாகாணங்களின் பாரளுமன்றப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவிருக்கும் இக்கூட்டத்தில் பலவிஷயங்கள் குறித்து ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்படவிருக்கின்றன.

# சிறிமாவின் எச்சரிக்கை

அத்தனகல, வியாழன்

"இலங்கை - இந்தியர் பிரச்னைக்கு ஒரு திருப்திகரமான தீர்வு காணும்விடில் இந்தியர்கள் இலங்கையைக் கைப்பற்றும் நிலை எதிர்காலத்தில் ஏற்படலாமென திர்கட்சித் தலைவர் திருமதி பண்டாரநாயக்கா அத்தனகலயில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

திருமதி சிறிமா மேலும் பேசுகையில் கூறியதாவது:

எமது அரசாங்கம் பதவியிலிருந்தபோது இலங்கை - இந்தியர் பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் நல்லதொரு முயற்சி மேற்கொண்டோம் நாட்டை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்னை இது.

இந்த நாட்டிலுள்ள தமிழர்கள் சமஅந்தஸ்து கோருகின்றனர். குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்கள் தமிழை அரசகரும மொழியாக்க வேண்டுமெனக் கோருகின்றனர். இதனால் இப்பகுதியிலுள்ள சிங்கள மக்கள் கஷ்டத்தை அனுபவிக்கவேண்டி நேரிடும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இருக்கும்வரை தனிச்சிங்களச் சட்டத்தை மாற்றி விட்டுக்கொடுக்கவும் அனுமதிக்காது.

# 'ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை வேண்டும்'

ஊர்காவற்றுறை, வியா

'ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை வேண்டும். தேசிய அரசாங்கம் ஆசிரியர் உரிமையில் நியாயமாக நடந்து கொள்ளுமென நம்பலாம்'

தீவுப்பகுதி தமிழாசிரியர் சங்க வருடாந்தக் கூட்டம் வேலணை அரசினர் மத்திய கல்லூரியில் நடைபெற்ற போது சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பண்டிதர் திரு வீ வ நல்லதம்பி மேற்கண்டவாறு கூறினார் மேலும் அவர் பேசுகையில் தீவுப்பகுதித் தமிழாசிரியர்களின் நன்மைகருதி அதற்கென ஒரு காரியாலயத்தை நிறுவுதல் அவசியமானது என தெரிவித்தார்.

பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர் பண்டிதர் வீ வ நல்லதம்பி, உப தலைவர்கள் திரு சி கணபதிப்பிள்ளை, திரு செ ஐயாத்துரை, திரு ஐ பொன்னையா, கௌரவ காரியதரிசி திரு வே சங்கரப்பிள்ளை, உப காரியதர்சி திரு கா கோபால பிள்ளை, தனாதிகாரி திரு சு நமசிவாயம், பதினைந்து பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

# மாணவர்களுக்கு புத்தகவாசிப்பில் ஆர்வத்தை ஊட்டவேண்டும்

## புத்தக வாரக்கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், வியா

"பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களுக்கு புத்தகங்களில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கு ஏதாவது ஒருவிதத்தில் முதலில் அதிலொரு ஆசையை உண்டாக்கவேண்டும் அப்போதுதான் மாணவர்களுக்கு நல்ல புத்தகங்களை வாசிப்பதற்கும், அதன் மூலம் அறிவைப் பெருக்கவும் ஆர்வம் ஏற்படும்" என்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் திரு என் சபாரத்தினம் யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க நூல்நிலையத்தில் நடைபெற்ற "புத்தக வாசிப்பில் சாதனைகள்" என்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

தேசியபுத்தகவாரத்தை யொட்டி வட இலங்கை நூலக சங்கத்தாரால் யாழ்ப்பாணப் பொது நூல்நிலையத்தில் நடைபெற்ற புத்தகக்கண்காட்சியின் இறுதிநாள் நிகழ்ச்சியாக இக் கருத்தரங்கு இங்கு நடைபெற்றது.

திரு. ஹண்டி பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் திரு சபாரத்தினம் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

வீட்டிலே பெற்றோர்கள் புத்தகம் வாசிப்பதில் அக்கறையுள்ளவர்களாக இருக்கவேண்டும் அப்போதுதான் பிள்ளைகளுக்கும் புத்தகம்படிப்பதில் ஆர்வம் உண்டாகும். இவ்வழி மூலம் பிள்ளைகளுக்கு புத்தகவாசிப்பில் அக்கறையையும், ஆர்வத்தையும் ஏற்படுத்தினால் அவர்களுக்கு புத்தக வாசிப்பில் வெறுப்புண்டாகாது.

வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி மலர் தம்பையா பேசுகையில், சிறு குழந்தைகளுக்கு புத்தகப்படிப்பில் ஆர்வத்தை உண்டாக்க பள்ளி ஆசிரியர்கள் முயற்சி செய்யவேண்டுமென்று கூறினர்.

பேராசிரியர் நேசையாவும் உரையாற்றினார்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

மாக உரியவர் கைக்குச் சேர, இந்தியாவில் செய்வதுபோல் விலாசத்தாரின் கையெழுத்தை வாங்கிக் கொண்டே கொடுக்கச் செய்யவேண்டும்

• • •

கொழும்பு வீதிகளில் ஒரு தமிழ்ப் பெண்காலை வேளையில் முளைக்கீரை, அரைக்கீரை, பொன்னாங்காணி, கங்குன் முதலியவற்றை விற்றுக்கொண்டு சுறுசுறுப்பென்று சென்றார். இவை யென்று நல்ல கீரை. கட்டு பத்துசதம்தான். கால் ஏக்கர் நிலத்தை மாதம் 50 ரூபாய்க்கு வத்தைக்கு எடுத்து புருஷனும் மனைவியுமாக உழைத்துப் பலபல கீரைகளை பயிரிட்டு விற்று குத்தகைப்பணம் கட்டி தாங்களும் உழைத்துப் பிழைக்கின்றனர்

சென்றமாதம் ஒருகாலையிலே புருஷன் தோட்டத்தில் உழைக்க, மனைவி கீரை விற்க வந்துவிட்டார், தக வீட்டுக்கு காவல் ஒரு நாய்தான். யாரோ சிலர் அந்த நாய்க்கு விஷமிட்டுக்கொன்று, வீட்டிலிருந்த சுமார் 500 ரூபாய் மதிப்புள்ள பொருள்களைக் கொள்ளையடித்துப் போய்விட்டனராம். போலிசில் முறையிட்டும் பயனில்லை. இவ்விவரங்களை வேறொரு அன்பர்மூலம் அறிந்தேன். பாவம் ஏழைகளுக்குத் தான் எவ்வளவு ஆபத்துக்கள். என்றாலும் அந்தத் தமிழ்ப் பெண் சற்றும் மனம்சோர்ந்துவிடாமல் உற்சாகத்துடன உணவு உற்பத்தி செய்து தெருத்தெருவாக விற்கிறர். ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தப்படி இவ்வுழைப்பாளர் நாடுகடத்தப்படுவார்களா?. உழைப்பாளிக்கு எங்கும் பிழைப்பு உண்டு. ஆனால் இங்கு கீரை விலை கட்டு 20 சதம். கிவிடலாமென்று அஞ்சுகிறார் அன்பர்.

∴

தஞ்சாவூர் தஞ்ச விளைதஞ்சோழ நெஞ்சானைந்து
நினையினுடோறும் வஞ்சக மற்றடி வழ்ந்தவந்த கூற்றஞ்ச
வுதைத்தன வஞ்செழுத்துமே
(திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்)

# ஐயாறன்

[illegible]

ஸ்பென்சர் ராஜரத்தினம அவர்களை கதிர்காமத்திலே குத்திக் கொன்ற குற்றத்துக்காக, எதிரி சின்னத்தம்பி என்பவருக்கு காலி நீதிமன்றத்தார் தூக்கு தண்டனை விதித்ததாக செய்தியைக் கேட்டதும், அப்பெரியாரைப் பற்றிய பழைய ஞாபகங்களெல்லாம் வந்தன.

மாவட்ட நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற அப்பெரியார் பாணந்துறை, கதிர்காமம் முதலிய இடங்களிலே முருகன் கோவில்களைக் கட்டியதுடன், கதிர்காமம் தேவானையம்மன் கோவிலில் யாத்திரிகர்களுக்காக பல புதிய விடுதிகளை கட்டியுள்ளனர், நவீன முறையில் மிக வசதியாகக் கட்டியுள்ள விடுதிகள் இவை. பல ஆண்டுகளாக துறவிபோல் வாழ்ந்தவர், ஒரு சிறு பூச்சிக்கும் கூட துன்பம் விளைவிக்க எண்ணாதவர், அவருக்கு மகாத்மா காந்திபோல், இப்படி அகால மரணம் ஏற்பட்ட காரணம் புரியவே இல்லை.

எதிரி அப்பீல் செய்து கொள்ளலாம், அல்லது மரண தண்டனையை ஒழிக்க வேண்டுமென்ற கிளர்ச்சி மீண்டும் ஏற்பட்டுள்ளதால் அத்தண்டனை ஜன்ம தண்டனையாக மாற்றப்படலாம். இது எப்படியாயினும், பெரியார் ஸ்பென்சரைப் போல் இன்னொருவரை நம் இனி எப்போது காணப் போகிறோம்! பாணந்துறை கோவிலுக்கு மீண்டும் கும்பாபிஷேகம் செய்து பூசைகளை ஒழுங்காக நடக்க ஏற்பாடு செய்தும், தேவானையம்மன் கோவிலிலுள்ள விடுதிகளை அழுக்காமல் அவற்றைப் யாத்திரிகர்களுக்குப் பயன்படுத்துவது, அவர் ஆத்மாவுக்கு சாந்தி அளிக்கும், அவ்விதம் செய்வார்களா?

• • •

கொழும்பு பெரிய தபால் கந்தோரில் சென்ற செவ்வாயன்று 40 பதிவுத்தபால்கள் மறைந்துவிட்டனவா. இதுவரை 300 பதிவுத் தபால்கள் காணாமற் போனதாகவும், தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுக்காததை ஆட்சேபித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒருநாள் வேலை நிறுத்தம் செய்ததால், இனியாவது இதற்கு ஒரு விமோசனம் பிறக்க வேண்டும்.

இப்பதிவுத் தபால்களை வீடுக்குவீடு கொண்டு கொடுக்கும் போஸ்மென்கள், தங்களிடம் கொடுக்கப்பட்ட இத்தபால்களின் மொத்த எண்ணிக்கையைக் குறிப்பிடு கையெழுத்திட மறுக்கிறார்களாம். இதை எண்ணுவதால் காலதாமதமாகுமென்று காரணம் கூறுவதாகத் தெரிகிறது. இது உண்மையாயின் இது பெரிய வெட்கக்கேடு.

மதிப்புவாய்ந்த தபால்கள் பத்திரமாகச்சேர வேண்டுமென்ற காரணத்தால்தான், அதிக கட்டணம் செலுத்தி, பதிவுத்தபால்களாக அனுப்பி வைக்கிறோம், இவற்றை விலாசத்தாருக்குக் கொண்டு கொடுக்கும் தபால் காரர்கள் இதற்கான பொறுப்பையும் ஏற்கக் கடமைப் பட்டுள்ளனர். இத் தபால்களை எண்ணி கையெழுத்திடுவதற்கு எவ்வளவு நேரம் ஆகிவிடப்போகிறது! அவசியமாயின் இரண்டொரு அதிக ஆட்களை நியமிக்கலாம். அப்படியின்றி பதிவுத் தபால்களுக்கு யாரும் பொறுப்பேற்காவிடில் இந்த முறையையே நீடிப்பது நம்பிக்கைத் துரோகமாகும்.

இந்தியாவிலே போஸ்ட்மென்கள், பதிவுத் தபால்களை உரிய விலாசத்தாரிடம் கையெழுத்து வாங்கித்தான் கொடுப்பார்கள், ஆனால் இங்கோ யாரிடமும் கையெழுத்துவாங்கிக்கொண்டு கொடுத்துவிடுகிறார்கள், பல மதிப்புவாய்ந்த தபால்கள் பிறர் கையில் சிக்கி மறையவும் இது இடமளிக்கிறது. இவை பத்தி

(4-ம் கலம் பார்க்க)

# வியட்காங் இலக்குகள் மீது ஓயாத விமானத் தாக்குதல்

## 500 டன் குண்டுகள் போடப்பட்டன 150 கொரில்லாக்கள் பலி

### தென் வியட்னமுக்கு மேலும் அமெரிக்க துருப்புக்கள் செல்லும்

வாஷிங்டன், ஜூலை 22

**சைகோனிலிருந்து திரும்பிய அமெரிக்க பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாரா, ஜனாதிபதி ஜோன்ஸனிடம் தமது பயணம் பற்றித் தெரிவித்தார்.**

**தென்வியட்னமுக்கு இன்னும் அதிக அமெரிக்கப் படைகளை அனுப்பவேண்டுமென அவர் ஜனாதிபதியிடம் சிபார்சுசெய்திருப்பதாய்க் கூறப்படுகிறது.**

லண்டனிலிருந்து வடவியட்னும் தலைநகர் ஹனோய்க்குச் செல்லும் 5 பேரடங்கிய கானா விசேஷ தூதுகோஷ்டி இன்று கூர்ச் வந்துசேர்ந்தது. தமது விஜயம் பயனளிக்குமென நம்புவதாக அதன் தலைவர் கூறினார். தான் அதிபர் ஹோசிமின்னுடன் பேசியவுடன் அதிபர் நிக்ருமாவிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்போவதாய் அவர் தெரிவித்தார்.

தென்வியட்னும் சார்பாகப் பேச வியட்காங்கியர்களுக்கு மட்டுமே உரிமையுண்டென வடவியட்னும் கூறியிருக்கின்றது.

ஜனாதிபதி ஜோன்ஸனின் விசேஷ தூதர் திரு. ஹரிமன் நேற்று மீண்டும் சோவியத் பிரதமர் திரு. கொஸிஜினைச் சந்தித்து வியட்னும் பற்றிய அமெரிக்காவின் கொள்கையை விளக்கினர்.

லண்டனிலுள்ள ரஷ்ய தூதர பிரதமர் வில்ஸனைச் சந்தித்து ரஷ்ய அரசாங்கத்தின் கடிதம் ஒன்றைச் சமர்ப்பித்ததாக அறிவிக்கப்படுகின்றது.

**வியட்காங் தாக்குதல்**

நேற்று சைகோனுக்கு அருகில் பியன்ஹோவா விமானத்தளத்தை வியட்காங்கியர் மூன்றாவது தடவையாகத் தாக்கினரென்றும், அமெரிக்க ஜெட் விமானமொன்று கடலில் சுட்டு வீழ்த்தப்பட்டதென்றும் கூறப்பட்டது.

வியட்காங்கியரின் பலமான இலக்கொன்றை 30 அமெரிக்க கனரக விமானங்கள் தாக்கி, 500 டன் குண்டுகளை பொழிந்தனவென்றும், 24 மணி நேரத்தில் 272 முறை இந்த இலக்குமீது தாக்கப்பட்டதென்றும் கூறப்பட்டது. 150 கொரில்லாக்கள் கொல்லப்பட்டனவாம்.


கடந்த திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் 8 அமெரிக்க ஜெட் விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாய் வடவியட்னும் கூறுகிறது.

# திபேத்தில் சீனஎதிர்ப்பு தொடருகிறது

ஹாங்காங், ஜூலை 22

திபேத்திய மக்கள் கம்யூனிஸத்திற்கு எதிரான போராட்டத்தை இன்னும் கைவிடவில்லை என "டைகர் ஸ்டாண்டர்ட்" என்ற ஹாங்காங் பத்திரிகை கூறுகிறது.

25,000 திபேத்தியர்களின் ஆயுதக்கிளர்ச்சி, சிக்கிமுக்கும் பூட்டானுக்கும் வரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு, பரந்த அளவிலான எதிர்ப்பு ஆகியவை பற்றிய செய்திகள் வானொலி ரேடியோ மூலம் அறிவிக்கப்பட்டதை அது உதாரணம் காட்டுகிறது. திபேத்தியர்கள் கம்யூனிஸத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றும், சீன ஆதிபத்தியத்தில் அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்றும், பீகிங் கூறுவது பொய் என்பதை இது நிரூபிக்கிறதென்றும் அது மேலும் கூறியது.



மிச்சிகனிலுள்ள டெட்ரஸ்ட் நிலையத்தில் மோட்டார் என்ஜின் பாகங்கள் தானே இயங்கும் யந்திரங்கள் மூலம் வார்க்கப்படுவதைப் படத்தில் காணலாம். இவ்விதத் தொழிலுக்கு உயர்தரப் பயிற்சி பெற்ற ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள்.

## பீகார் அசெம்பிளி

பாட்னா, ஜூலை 22

பீகார் சர்வகலாசாலைகள் சட்டத்திருத்த மசோதா ஆங்கிலத்தில் இருந்ததால் அதன் பிரதிகளை அசெம்பிளியில் சமர்ப்பிப்பதற்கு சபாநாயகர் திரு எல். என். சுதன்சு அனுமதி மறுத்தார். இந்த அவசரச்சட்டம் கவர்னர் ஸ்ரீ அனந்தசயனம் பிறப்பித்ததாகும்.

பீகார் ராஜ்யமொழிச் சட்டப்படி அவசரச் சட்டங்கள் ஹிந்தியில் இருக்க வேண்டும் என்றும் அதனால் ஹிந்தியிலுள்ளதையே அனுமதிக்கமுடியும் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

## பாக் உளவுகோஷ்டி சதி தகர்க்கப்பட்டது

ஸ்ரீநகர், ஜூலை 22

காஷ்மீரில் போர்நிறுத்த எல்லைக் கோட்டுக்கருகே லாலாப் பள்ளத்தாக்கில் இயங்கிக் கொண்டிருந்த பாகிஸ்தான் உளவுக் கோஷ்டியின் நடவடிக்கை தகர்க்கப்பட்டதாக அதிகாரபூர்வமாகத் தெரிகிறது.

இக்கோஷ்டியின் தலைவர் சிரேஷ்ட பாகிஸ்தான் உளவு ஏஜென்டு என நம்பப்படுகிறது. ரேடியோ ஒன்றுடன் இத்நபர் சென்ற வாரம் பிடிபட்டார்.

இரகசியத் தகவல்களைப் பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு அவர் அனுப்பிக் கொண்டிருந்ததை ஊர்ஜிதம் செய்யும் சில முக்கியமான தஸ்தாவேஜுகள் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

## ஐ. நா. மகாசபை தலைவர் பதவி

நியூயோர்க், ஜூலை 22

அடுத்த ஐ நா. மகாசபைத் தலைவர் பதவிக்கு கானா, ஆஸ்திரேலியா, பின்லந்து, போலந்து ஆகிய நாடுகள் போட்டியிடக்கூடும் எனத்தெரிகிறது. மகாசபை வருகிற செப்டம்பர் மாதம் ஆரம்பமாகவிருக்கிறது.

## அமெரிக்க ஜனாதிபதி

வாஷிங்டன், ஜூலை 22

அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் அடுத்தவார இறுதிக்கு முன் ராணுவ சேவையை விஸ்தரிக்கவும், ரிசர்வ் படையை சேவைக்கழைக்கவும் உத்தரவிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. வியட்னும் சென்றிருந்த அமெரிக்க பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாராவின் சிபார்சு அடிப்படையில் இது இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கிரீஸில் பெரும் ஆர்ப்பாட்டங்கள்

ஏதன்ஸ், ஜூலை 22

முன்னாள் கிரேக்க பிரதமர் திரு. பபாந்திரியோவை ஆதரித்து நேற்று கிரீஸின் பல நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பு காரணமாக ஒருவர் கொல்லப்பட்டார். 100-க்கு அதிகமானோர் காயமடைந்தனர். பொலிசார் கண்ணீர்ப்புகையையும், கவச மோட்டார்களையும் உபயோகித்தனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் 2 கவச மோட்டார்களைச் சேதப்படுத்தினர்.

ஸலோனிக்கா நகரில் 20000 பேர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். புதிய பிரதமரின் கொடும்பாவி ஒன்றை அவர்கள் கொளுத்தினர்.

# பீகிங்கில் இலங்கை டென்னிஸ் ஆட்டவீரர்கள்

பீகிங், ஜூலை 22

இலங்கை டேபிள் டென்னிஸ் கோஷ்டியொன்று, ஆகஸ்ட் 1ந் தேதி முதல் 9ந் தேதி வரை பீகிங்கில் நடைபெறவிருக்கும் இரண்டாவது சர்வதேச டேபிள் டென்னிஸ் டூர்னமென்டில் பங்குபற்றுவதற்காக விமானமூலம் பீகிங் வந்தடைந்தது.

இலங்கை டேபிள் டென்னிஸ் சம்மேளனத்தின் உபதலைவர்களான ஏ. கே. பேசரத்தினம், டி. எல். சல்காடோ ஆகியோரின் தலைமையிலான இக்கோஷ்டி விமானநிலையத்தில் டூர்னமென்டை ஒழுங்கு செய்யும் கமிட்டியின் உபஅக்கிராசிலரும், அகில சீன விளையாட்டுச் சம்மேளனத்தின் சர்வதேசத தொடர்பு இலாகாவின் நிர்வாகியுமான ஜூவோ லையிலும், சீன டேபிள் டென்னிஸ் ஆட்டக்காரர்களாலும் வரவேற்கப்பட்டது.

பீகிங்கில் உள்ள இலங்கை ஸ்தானிகராலயத்தின் இரண்டாவது காரியதரிசி ரி. சென்ற் எல்மோ ஜோசெப் விமான நிலையம் வந்திருந்தார்.

இந்த இலங்கைக் கோஷ்டியில், இலங்கை ஆண்கள் ஒற்றையர் சாம்பியன சார்லஸ் டானியல் உள்ளிட்ட நான்கு ஆண்களும், இரு பெண்களும் உளளனர்.

## தீமூட்டித் தற்கொலை

ஸியோல், ஜூலை 22

ஜப்பானுக்கும் தென்கொரியாவுக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தை எதிர்த்து, தென்கொரியத் தலைநகரில் ஒருவர் தன் உடைகளுக்குத் தீமூட்டி தற்கொலை செய்துகொண்டார்.

## சீனுவுக்கு இரண்டரைகோடி புசல் கோதுமை

பீகிங், ஜூலை 22

சீனு கனடாவிலிருந்து 2,50 00 000 புஷல் கோதுமையை வாங்கவிருக்கிறது.

## இந்தியாவுக்கு 4 ரஷ்ய நீர்மூழ்கிகள்

மாஸ்கோ, ஜூலை 22

இந்திய கடற்படைக்கு 4 நீர்மூழ்கிகளைத்தர ரஷ்யா இசைந்திருப்பதாயும், இதுபற்றிப் பேச்சுநடத்தும் பொருட்டு இந்தியத் தூதுகோஷ்டி ஒன்று விரைவில் மாஸ்கோ வரும் என்றும் அறிவிக்கப்பட்டது.

## பிரம்ம புத்ரா அபாயநிலை

புதுடில்லி, ஜூலை 22

அஸ்ஸாமில் பிரம்ம புத்ரா நதி பெருக்கெடுத்துள்ளதால் மூன்று இடங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாயும் 47 கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளதாயும் அறிவிக்கப்படுகிறது. பம்பாயிலும் சுற்றுப்புறங்களிலும் கனத்த மழை ஏற்பட்டிருப்பதாக மேலும் அறிவிக்கப்பட்டது.

## அஸாத் காஷ்மீரில் ராணுவப் பயிற்சி

கராச்சி, ஜூலை 22

பாகிஸ்தான்வசமுள்ள காஷ்மீர் பகுதியில் கிராமங்கள், பள்ளிகள், மற்றும் பல இடங்களில் கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாயும், இந்திய பயமுறுத்தலை எதிர்ப்பதே இதன் நோக்கம் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## சாஸ்திரி - டி. டி. கே பேச்சு

புதுடில்லி, ஜூலை 22

இந்தியப் பிரதமமந்திரி திரு. சாஸ்திரி நிதிமந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியுடன் நாட்டின் பொருளாதார நிலைமை பற்றி நேற்று விவாதித்தார்.

## கி. பாகிஸ்தானுக்கு பாரபட்சம்

டாக்கா, ஜூலை 22

பாகிஸ்தான் முப்படை சேவையிலும், இதர பல அம்சங்களிலும் கிழக்குப்பாகிஸ்தான் அநீதியான முறையில் புறக்கணிக்கப்படுவதாக டாக்கா சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

## இந்தியாவுக்கு 10 லட்சம் கோதுமை

வாஷிங்டன், ஜூலை 22

அடுத்த சிலவாரங்களில் 10 லட்சம் டன் கோதுமையை அமெரிக்கா இந்தியாவுக்கு வழங்கும் என அறிவிக்கப்பட்டது.

## இருபது ஆண்டுகளின் சாதனை

பெர்லின், ஜூலை 22

"20 ஆண்டுகளுக்கு முன் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு அடைந்துள்ள மகத்தான சாதனைகள் என்னை மிகவும் கவர்ந்துவிட்டன. இன்று பொருளாதாரத்தில் பின்தங்கிய ஆபிரிக்க நாடுகளுக்கு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு பொருளாதார உதவிகளை வழங்குவதுடன், அரபு நாடுகளுடன் தனது அனுபவங்களையும் பகிர்ந்துகொள்கிறது" என்று நைஜீரியாவின் தொழிற்சங்க சம்மேளனத்தின் உபதலைவர் திரு. டிகசன் ஒவிசேகு இங்கு கூறினர். அவர் ஆபிரிக்க நாடுகளிலிருந்து இங்கு வந்திருந்த ஏனைய தொழிற்சங்கவாதிகளுடன் 8,500 ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஒரு கால்நடை வளர்ப்புப் பண்ணைக்குச் சென்று பார்வையிட்டார்.

## சர்வதேசப் பொருளாதார வகுப்பு

பெர்லின், ஜூலை 22

ஜெர்மன் ஜனநாயகக்குடியரசிலே பெர்லின் பொருளாதாரக் கல்லூரி, விடுமுறைக்காலத்தின் சர்வதேசிய வகுப்பு ஒன்றினை பெர்லினில் ஏற்பாடு செய்துள்ளது. 17 நாடுகளைச் சேர்ந்த 80 பேராசிரியர்களும் உயர்தர பட்டங்களைப் பெற ஆராய்ச்சி நடத்துகிறவர்களும் அரசாங்க அதிகாரிகள் பலரும் இந்த வகுப்பில் பங்குபற்றியுளளனர்.

ஜூன் 28-ந் திகதி முதல் ஜூலை 31-ந் திகதி வரை நடைபெறும் இந்த வகுப்பில் "சோஷலிஸத்தில் தேசிய பொருளாதாரத்தின் நிர்வாகமும், திட்டமிடுவதும்" என்பது பற்றி பிரபல பொருளாதார நிபுணர்களும் பேராசிரியர்களும் விரிவுரை நிகழ்த்துகின்றனர். சோஷலிஸ நாடுகளுக்கும், வளர்ச்சி பெறும் நாடுகளுக்குமிடையே உள்ள பொருளாதார உறவுகள் பற்றியும் உரைகள் நிகழ்த்தப்படுகின்றன.

## இந்தோனேஷியாவுக்கு 2000 பஸ்கள்

பெர்லின், ஜூலை 22

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலிருந்து 50 ரோபர் பஸ்கள் முதலில் உதிரிப் பாகங்களான இந்தோனேஷியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும். கிழக்கு இந்தோனேஷியாவில் சுரபாயாவில் அமைக்கப்பட்டுள்ள ஒரு மோட்டார் தொழிற்சாலையில் இந்தப் பாகங்கள் இணைக்கப்பட்டு பஸ்கள் உருவாக்கப்படும். இந்தோனேஷியாவின் வேண்டுகோளின் மீதே பஸ்களின் பாகங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு, உள்ளூரில் அவை இணைக்கப்படுகின்றன. 1967-ல் இந்தோனேஷியாவுக்கு மொத்தம் 2,200 ரோபர் பஸ்களை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு ஏற்றுமதி செய்யும்

மலைநாட்டுக் கடிதம்

# 'மாட்டுத்தொழுவங்கள்' போன்ற தோட்டப்பாடசாலைகள்

## அரசாங்கம் பொறுப்பேற்று அபிவிருத்தி செய்யுமா?

### பிரஜாவுரிமை நிராகரிக்கப்பட்டோர் மீண்டும் மனுச்செய்ய வாய்ப்பு

— நமது மலைநாட்டு நிருபர் —

தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்று நடத்த வேண்டுமென்பது தோட்டப்பகுதியில் இப்பொழுது முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாகி வருகின்றது. தொழிற் சங்கங்களும் இதர சமூக இயக்கங்களும் இந்த விஷயத்தில் அதிக கவனம் செலுத்தி வருகின்றன.

தொழிலாளர் வேலைக்குப் போன பிறகு அவர்களின் பிள்ளைகள் தேயிலைச் செடிகளையும் ரப்பர் கன்றுகளையும் கொய்து 'நாசம்' விளைவித்துவிடாதபடி அவர்களை ஓரிடத்தில் அடைத்து வைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட 'பிள்ளை மடுவங்கள்' தான் இன்று தோட்டப் பாடசாலைகள் என்று அழைக்கப்படுகின்றன. குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சில தோட்டங்களைத் தவிர மற்ற எல்லா தோட்டங்களிலும் இந்த 'மடுவங்கள்' மாட்டுத் தொழுவங்களைப் போல இன்னும் பழைய நிலையிலேயே இருந்து வருகின்றன. சில தோட்டங்களில் பாடசாலை கட்டிடங்கள் பிரமாதமாக அமைக்கப்பட்டு இருந்தாலும் அங்கு நடைபெறும் கல்விபோதனை வெறும் கண்துடைப்பு வேலைதான். தராதரம்பெற்ற ஆசிரியர்களோ காலத்துக்கேற்ற சாதனங்களோ கிடையாது. இப்பாடசாலைகளில் பயின்றுவிட்டு நகரப் பள்ளிகளுக்குவரும் மாணவர்கள் பெரும்பாலும் பின்தங்கி வருவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இரண்டொருவர் முன்னேறிவிடுகிறார்கள் என்றால் அதற்கு அப்பிள்ளைகளின் தனித்திறமை அல்லது அவர்களுக்கு படிப்பித்த தோட்ட ஆசிரியர் எடுத்துக் கொண்ட விசேஷ அக்கறைதான் காரணம்.

நாடு சுதந்திரம் பெற்று பல ஆண்டுகள் ஆகியும் பல அரசாங்கங்கள் பதவிக்கு வந்து போயும் இன்னும் தோட்டப் பாடசாலைகளின் நிலைமை மாறாமல் இருப்பது வேதனைக்குரிய விஷயம் தான். நகரப் பாடசாலைகளைத் தேசியமயமாக்குவதற்கு முன்பே தோட்டப் பாடசாலைகளைத் தேசியமயமாக்கியிருக்க வேண்டும். ஏதேதோ காரணங்களால் அது நடைபெறாமல் போய்விட்டது.

தற்போது நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் தேசிய அரசாங்கம் இந்த விஷயத்தில் முழு அக்கறை எடுத்துக் கொள்ளும் என்றே பொதுவாக நம்பப்படுகின்றது. இதுவிஷயமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நிதிக் காரியதரிசியும் பாராளுமன்ற நியமன உறுப்பினருமான திரு. அண்ணாமலை அண்மையில் கல்வி அமைச்சரைப் பேட்டிகண்டு பேசியுள்ளார். அமைச்சரும் கவனம் செலுத்துவதாக உறுதியளித்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

### பிரஜாவுரிமைக்கு மனு

பிரஜாவுரிமை கோரி மனுச் செய்து மறுக்கப்பட்டதால் நாடற்றவர்கள் என்று வர்ணிக்கப்படும் மக்கள் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் காரணமாக மீண்டும் செப்டம்பர் மாதம் முதல் மனுச்செய்ய வசதி செய்யப்படும் என வெளிவந்துள்ள செய்திகள் மலைநாட்டில் ஒருவித பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நாடற்றவர்களாய் இருக்கும் மக்களில் பெரும்பான்மையானவர்கள் தோட்டத் தொழிலாளராய் இருப்பதால் இதுவிஷயமாக தகவல் தெரிந்து கொள்ள அவர்கள் பெரிதும் ஆர்வம் காட்டுகிறார்கள். கடந்தமுறை ஏனோதானோ என்று இருந்துவிட்டதின் பிரதிபலன்களை நன்கு அனுபவித்துவிட்டார்கள் அல்லவா?

ஃ ஃ ஃ

### நீரில் மூழ்கும் ஆபத்து

மஸ்கெலியஓயா நீர்வீழ்ச்சி மின்சாரத் திட்டத்தின் காரணமாக அட்டன் மாநிலத்தில் விஸ்தாரமான ஒருபகுதி நீரில் மூழ்கிப் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இப்படி நீரில் மூழ்கிப் போகவிருக்கும் பிரதேசங்களில் வாழும் தொழிலாளர்கள், விவசாயிகள் வர்த்தகர்கள் அனைவரும் தாம செய்யும் தொழில்களை விட்டுச் செல்ல வேண்டி ஏற்படுமே என்ற கவலை கொண்டுள்ளார்கள். அப்படியான ஒருநிலைமை உருவானால் தொழில்களை இழந்தவர்களுக்கு புனர்வாழ்வு அமைத்துக் கொடுக்க வேண்டுமென மஸ்கெலிய பகுதியிலுள்ள பொதுஸ்தாபனங்களும் தொழிற்சங்கங்களும் அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்றன. பாராளுமன்ற நியமன உறுப்பினர் திரு வி. அண்ணாமலை இதுவிஷயமாக விசேஷக் கவனம் எடுத்து வருவதோடு அரசாங்கத்தோடு நேரடித் தொடர்பும் கொண்டுள்ளார்.

### போராட்டம் வெற்றி

இத்திட்டத்தின் வலதுபுற வீதி அமைப்பின் காரணமாக காட்மஸ்கெலிய தோட்டத்துக்குச் சொந்தமான இரண்டு லயன் அறைகளில் பொது மராமத்து இலாகாவுக்குக் கையளிக்க வேண்டியிருப்பதால் அந்த லயன் அறைகளில் வசிக்கும் சுமார் 66 தொழிலாளருக்கு வேலைநீக்க அறிவித்தல் கொடுக்கப்பட்டது. தோட்டத்தில் வேலைவாய்ப்புகள் நிறைய இருக்கும்போது தொழிலாளருக்கு வேறுவசிப்பிடம் தேடிக் கொடுப்பதை விடுத்து வேலைநீக்கம் செய்வது அநீதி என்ற அடிப்படையில் மஸ்கெலிய மாவட்டத்தில் இ. தொ. காங்கிரஸ் நடத்திய மாபெரும் அடையாள வேலைநிறுத்தத்தில் 10 ஆயிரம் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். அதன் காரணமாக வேலைநீக்க அறிவித்தல்களை வாபஸ் பெற்றுக் கொண்டு சம்பந்தப்பட்ட தொழிலாளருக்கு வேறுவசிப்பிடம் ஒழுங்கு செய்யதோட்ட நிர்வாகம் ஒப்புக் கொண்டுள்ளது.

ஃ ஃ ஃ

### புதிய தொழிற்சங்கம்

இ. தொ. கா, விலிருந்து விலகிய திரு. வி. கே. வெள்ளையன் புதுத் தொழிற்சங்கம் ஒன்று அமைத்திருப்பது தெரிந்த விஷயமே. தேசியத் தொழிலாளர் சங்கம் என்ற பெயரில் இயங்கிவரும் இத் தொழிற்சங்கம் தற்பொழுது அட்டன் மாநிலத்திலும் நுவரேலியா மாவட்டத்திலும் படிப்படியாக காலப்போக்கில் இதர பகுதிகளுக்கும் விஸ்தரிக்கும் பேராவதாக இச் சங்கத்தின் அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

ஃ ஃ ஃ

மலைநாட்டு மக்களைக் கூறுபோட்டு பலவிதத்திலும் தம் சொந்த அபிலாசைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகவே சிலர் பயன்படுத்திவருவதாகவும் அந்த நிலைமையை மாற்றி மலைநாட்டுத் தொழிலாளர்கள் இழந்துபோன உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காகவே தமிழரசுக் கட்சி மலைநாட்டில் இலங்கைத் தொழிலாளர் கழகத்தை அமைத்துச் செயலாற்றி வருவதாகவும் சமீபத்தில் தொழிலாளர் கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஏ. அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

ஃ ஃ ஃ

தோட்டங்களில் வாராந்திர சம்பளம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை இ. தொ. காங்கிரஸ் செய்துவருகிறது. இதற்கு முதற்படியாகக் கடந்த மாதத்திலிருந்து தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் அதிகாரத்திலுள்ள தோட்டங்களிலெல்லாம் தொழிலாளருக்கு மாதம் இருமுறை சம்பளம் வழங்கப்படவேண்டும் என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரசைப் பொறுத்தவரை இந்த ஏற்பாடு அவ்வளவு உசிதமானதல்லவென்ற கருத்தை அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஃ ஃ ஃ

### காங்கிரஸ் வாலிபர் மகாநாடு

இம்மாதம் 25ம் திகதி அட்டன் நகரில் இ. தொ. காங்கிரஸ் வாலிபர் மாநாடொன்று நடைபெறவிருக்கின்றது. இம்மகாநாட்டில் அட்டன் பகுதியிலுள்ள நூற்றுக்கணக்கான தோட்டங்களிலுமிருந்து ஆயிரக்கணக்கான வாலிபத் தொழிலாளர்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### தொண்டமான் திரும்புகிறார்

இ. தொ. காங்கிரஸ் தலைவர் திரு எஸ். தொண்டமான் ஜெனிவாவில் நடைபெற்ற சர்வதேசத் தொழில் ஸ்தாபனத்தின் 49-வது மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு இம்மாத இறுதியில் இலங்கை திரும்பவிருக்கிறார். அடுத்த மாதம் இ. தொ. கா. வருடாந்த மாநாடு மாத்தளையில் நடைபெறவிருப்பதால் அதற்கான ஏற்பாடுகளை இ. தொ. கா. பிரமுகர்கள் செய்துவருகின்றனர்.

ஃ ஃ ஃ

இலங்கை வானொலியில் மலைநாட்டு எழுத்தாளர்களுக்கும், கலாசார ஸ்தாபனங்களுக்கும், கலைஞர்களுக்கும் போதியளவு சந்தர்ப்பம் கொடுக்கப்படுவதில்லையென்று பொதுவாகத் தெரிவிக்கப்பட்டுவந்த குறைபாடு இப்போது குறைந்து வரும் அறிகுறிகள் தென்படுகின்றன. மலைநாட்டு கலாசார நிகழ்ச்சிகளை ஒலிபரப்புச் செய்யவும் கலைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்படுவதாக அறியப்படுகிறது. கடந்தவாரம் இலங்கை வானொலி கிராம சஞ்சிகையில் தோட்ட இலக்கியம் என்ற தலைப்பில் பி. எஸ். ராஜு (மலைச்செல்வன்) பேசினார். இதைத் தொடர்ந்து வேறு நிகழ்ச்சிகளும் இடம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### அரசியல்சார்பற்ற புதிய இயக்கம்

கடந்த 18-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலுள்ள மலைநாட்டு வாலிபர்கள் பலர் விவேகானந்தசபை மண்டபத்தில் தம் சமுதாயத்தின் மேம்பாட்டுக்கு சேவை செய்யும் இயக்கமொன்றை ஆரம்பிப்பது பற்றி ஆலோசனை நடத்தினார்கள்.

அரசியல் ஸ்தாபனங்கள் எதிலும் தொடர்பு கொள்ளாத

(5-ம் பக்கம் பார்க்க)


மகத்தான 3வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) மொடேர்ன் (பதுளை)

விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (ஹட்டன்)

என். டி. ராமராவ், அஞ்சலிதேவி, ஜெமினி கணேசன், எம். ஆர். ராதா, மாஸ்டர் முரளி, பேபி உமா, நாகையா மற்றும் பலர் நடித்த




லவகுசா

(முழுநீள கலர்ப்படம்)

உலகம் போற்றி புகழும் இராமாயண காவியத்தின் சித்திரிக்கும் ஒரு பொன்னேடு—லவகுசா—

படித்தவர்கள் பலகோடி! கேட்டவர்கள் பலகோடி!

இதோ சினிமாஸ்திரைகளில் பார்த்து மகிழுங்கள்!

REGAL - JAFFNA
NOW SHOWING
Margaret Rose Keil
in
THAT KIND OF GIRL
(The Shock Film of the Year!)
(Advlrs only))



# விளம்பரம்

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திரிக் கோர்ட்டில்

1. இமையாணன் கிருஷ்ண பிள்ளை தியாகராசா,
2. பெண் அழகரத்தினம்.

வழக்காளிகள்,

இல. 8611

எதிராக

1. கரணவாய் வடக்கு தியாகராசா கைம்பெண் பறுபதநாச்சன்,
2. சின்னத்துரை ஆறுமுகம்

எதிரிகள்

இமையாணன் குறிச்சி இறைபோத்தைடப்புலம் கி. பர 14. ஆனைவ் அளவில் படி கி பர. 15 குளி 8/82 என்னும் ஆதனம்.

எனனும் ஆதனங்களை 1951ம் ஆண்டின் 15-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச்சட்டத்திற்கமைய மேற்படி கோர்ட்டில் மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடக்கிருக்கின்றதென்று இத்தாலுமகறிவிக்கப்படடிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோர்ட்டில் 1965-ம் ஆ ஆவணி மீ 30 உ 10 மணிக்குச்சமூகமளிக்கும்படிகட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோர்ட்டாரின் கட்டளைப்படி

மு. ஸ்ரீபத்மநாதன்.

பிரதம லிகிதர் / சக்கிடுத்தார்

1965-ம் ஆ ஆடி மீ 13 உ

475

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திரிக் கோர்ட்டில்

பொலிகண்டி சின்னப்பிள்ளை செல்லையா வழக்காளி.

இல. 8468

எதிராக

பொலிகண்டி

1. வயிரத்தம்பி சின்னையா
2. பெண் தங்கமுத்து
3. சின்னையா கிருஷ்ணபிள்ளை
4. பெண் மகேஸ்வரி,
5. வயிரமுத்து ஆறுமுகம்
6. கதிர்காமசிதம்பர பிள்ளை
7. சீனியர் மீனாட்சிசுந்தரம்
8. பொன்னையா பாஸ்கரரத்தினம்
9. சின்னத்தம்பி பொன்னையா
10. பொன்னையா கிருஷ்ண பிள்ளை
11. பெண் தங்கம்மா
12. சிற்றம்பலம்பிள்ளை சந்தசாமி
13. பெண் இலட்சுமி பிள்ளை
14. சின்னத்தம்பி செல்லையா
15. பெண் சின்னம்மா
16. கனகசபாபதி சுப்பிரமணியம்
17. ஷை தற்காலம் கோட்முதலியார் வளவு, 6, ஹட்டன் ரோட், திருகோணமலை குமாரசாமி வேலும்மயிலும்
18. பெண் சரஸ்வதி
19. ஷை சிவன்கோவிலடி திருகோணமலை வேலுப்பிள்ளை துரைசாமி
20. பெண் சிவகாமிப்பிள்ளை
21. பொலிகண்டி செல்லையா நமசிவாயம்

எதிரிகள்

பொலிகண்டிக் குறிச்சியிலை கல்நுங்கைட்புலம் வீடு 1/2 ஷை கி. பர 29 3/4. செய்கை துலைகைப்புலம் கி. பர. 6.

என்னும் ஆதனம்.

என்னும் ஆதனங்களை 1951ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோர்ட்டில் மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடாந்திருக்கிறதென்று இத்தாலுமகறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோர்ட்டில் 1965-ம் ஆ ஆடி மீ 27 உ 10 மணிக்குச் சமூகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோர்ட்டாரின் கட்டளைப்படி

மு. ஸ்ரீ பத்மநாதன்,

பிரதம லிகிதர் / சக்கிடுத்தார்

1965-ம் ஆ ஆடி மீ 21 உ

473

உடுப்பிட்டி

# அமெரிக்கன்மிஷன் கல்லூரி விளையாட்டுப் போட்டி முடிவுகள்

வல்வெட்டித்துறை, வியாழன்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி இல்லங்களுக்கு இடையேயான விளையாட்டுப்போட்டி உடுப்பிட்டி வட்டார வித்தியாதரிசி தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டியில் மஞ்சள் இல்லம் 140 புள்ளிகளும் பச்சை இல்லம் 106 1/4 புள்ளிகளும் நீல இல்லம் 106 புள்ளிகளும் சிவப்பு இல்லம் 86 1/2 புள்ளிகளும் பெற்று முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெற்றன.

ஒரு மைல் ஓட்டம்: வி. கதிர்காமத்தம்பி, ஏ. ஜெயச்சந்திரன்,

உயரம் பாய்தல்: என், மகாதேவன், ஆம். கோபாலகிருஷ்ணன், வி. வர்ணகுலசிங்கம்.

880 யார் ஓட்டம்: வி. விமலநாதன், எஸ். செல்லத்துரை, வி. இராசு.

440 யார் ஓட்டம்: எஸ். பாலசிங்கம், வி. பத்மநாதன், பி. தவராசா.

220 யார் ஓட்டம்: எஸ் சுவேந்திரராஜா, ஆர். சித்திவிசிவராஜா, பி. இரத்தினசபாபதி.

குண்டு எறிதல்: எஸ். மகாலிங்கம், எஸ். சுவேந்திரராஜா, எஸ். சுந்தரலிங்கம்.

சாம்பியன்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்,

என் மகாதேவன், கே. தவம் எஸ் வேலாயுதம், கே பாலச்சந்திரன், பி கருணாநிதி, எஸ் திலீபநாதன்,

வெற்றி பெற்ற வீரர்களுக்கு திருமதி தருமசங்கரி பரிசில்கள் வழங்கினார் கல்லூரி அதிபர் எஸ் எஸ் செல்லத்துரை கொடியை ஏற்றி வைத்தார்.

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திரிக் கோர்ட்டில்

1. கரவெட்டி வடக்கு கயிலம் மறுசாமம் கயிலாயர் ஐயாத்துரை
2. பெண் நாச்சிப்பிள்ளை

வழக்காளிகள்

இல. 8471

எதிராக

1. கரவெட்டி வடக்கு கயிலம் கதிர்காமத்தம்பி
2. இராமலிங்கம் மகள் கனகராணி
3. கோவிந்தர் வயித்திலிங்கம்
4. பெண் தங்கம்மா
5. பொன்னையா சின்னத்துரை
6. கந்தர் குமாரசாமி
7. பெண் நாகம்மா
8. கார்த்திகேசு வேலாயுதம்
9. பெண் சிவக்கொழுந்து
10. தங்கராசா அசோகன்
11. தங்கராசா மகள் மாணிக்கவதி
12. நாகநாதர்கதிர்காமத்தம்பி

எதிரிகள்

கரவெட்டி வதிரிக் குறிச்சியிறை தனிப்பனையடி கி பர. 15 1/2 தோட்டம் 8 கூடிய கி. பர. 19 1/2

என்னும் ஆதனம்.

என்னும் ஆதனங்களை 1951ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோர்ட்டில் மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமகறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படிகோர்ட்டில் 1965ம் ஆ ஆடி மீ 27 உ 10 மணிக்குச் சமூகமளிக்கும்படி கட்டளைபண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோர்ட்டாரின் கட்டளைப்படி

மு. ஸ்ரீ பத்மநாதன்,

பிரதம லிகிதர் / சக்கிடுத்தார்

1965-ம் ஆ ஆடி மீ 21 உ

474

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

### வெள்ளி 23-7-65

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவசுற்சிந்தனை, 6-55 இஸ்லாமியசிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 பக்திப்பாடல்கள், 8-00 தேர்ந்த இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாதஸ்வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானஞ்சலி, 7-00 நதாப்பிரசங்கம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 நேயர்விருப்பம், 10-00 புல்லாங்குழல், கிளாரினெட், 10-00 தேர்ந்தஇசை

## பாதையின் சீர்கேடான சேவை

சுழிபுரம், வியாழன்

காரைநகர் — ஊர்காவற்றுறை கடலில் சேவைக்கு விடப்பட்டுள்ள பாதை அடிக்கடி பழுதடைவதால் பொதுமக்கள் போக்கு வரத்து செய்ய முடியாமல் கஷ்டம் அடைவதாக அறிவிக்கப்படுகிறது. கடந்த இரண்டு மூன்று தினங்களாக பாதை பழுதடைந்த நிலையில் சேவை செய்யாமல் நிற்கிறது.

## 'மாட்டுத் . . :

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சமூக இயக்கம் ஒன்றினை அமைப்பதென்று முடிவு செய்யப்பட்டது. அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை செய்வதற்கு ஒரு குழுவும் தெரிவுசெய்யப்பட்டது: "நாட்டிலுள்ள அரசியல் சமூக, கலாச்சார இயக்கங்களைப் பகைத்துக் கொள்ளும் வகையிலோ, அவைகளோடு ஒன்றிக்க இயங்கும் ஸ்தாபனமாகவோ இந்த மன்றம் அமையாமல் எல்லாரது. ஆசிகளையும் பெற்று பின்தங்கி நிற்கும் மலைநாட்டு மக்கள் சமுதாயத்தின் உயர்வுக்கு உழைக்கும் ஸ்தாபனமாக விளங்க வேண்டும்" என்று வாலிபர்கள் மத்தியில் உரை நிகழ்த்திய மெழுகதிரர் நல்லையா கூறினார்.

* * *

பிரஜாவுரிமை பெறும் இந்திய வம்சாவளியினரைத் தனியாக ஒரு இடாப்பில் பதிவு செய்வதில்லையென்றும் இ ர பிரஜைகளைப் போல பொது இடாப்பிலேயே அவர்களை பதியப் போவதாகவும் அரசாங்க வட்டாரங்களிலிருந்து வெளியாகியுள்ள செய்தி மலைநாட்டு மக்களுக்கு மகிழ்ச்சியழிக்கும் விஜயமாகும்.

பிரஜாவுரிமை பெறுகியவர்களை இடாப்பில் பதியப் போவதாக முந்தியஅரசாங்கம் அறிவித்திருந்தது. அப்படியானால் பிரஜாவுரிமைபெறும் இந்திய வம்சாவளியினர் இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கருதப்படுவார்களென்ற அச்சம் மலைநாட்டு மக்கள்மத்தியில் இருந்து வந்தது. அந்த அச்சம் இப்போது ஒழிந்து விடுமென்று எதிர்பார்க்கலாம்.

## பர்மாவிலிருந்து 65 ஆயிரம் அகதிகள்

புதுடில்லி, ஜூலை 22

கடந்த ஒரு வருடத்தில் பர்மாவிலிருந்து 64942 இந்தியர்கள் தாயகம் திரும்பியிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

கிராம சபைகள் கட்டளைச் சட்டம்,
17-ஆம் பிரிவின்படியான அறிவித்தல்

என் 1065— 1961 இன் 60-ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்ட படியான கிராம சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 17(5) ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு, உள்ளூராட்சி உதவி அதிகாரி, வடபிரதேச (மேல்), யாழ்ப்பாணம், சிவசுப்பிரமணியம் சின்மயானந்தகுரு மாணிக்கவாசகர் ஆகிய நான், இதன் அட்டவணையின் பத்தி. I இல் குறிக்கப்பட்டுள்ள கிராம சபையின் கூட்டத்தை அந்த அட்டவணையில் பத்தி. II இல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில், அந்த அட்டவணையில் பத்தி. III இல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த அட்டவணையின் பத்தி, IV இல் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

சி. சி. மாணிக்கவாசகர்,
உள்ளூராட்சி உதவி அதிகாரி,
வட பிரதேசம் (மேல்),

யாழ்ப்பாணம்.

| பத்தி- 1 கிராம சபையின் பெயர். | பத்தி. 2 திகதி | பத்தி. 3 நேரம் | பத்தி, 4 இடம் |
|---|---|---|---|
| மாணிப்பாய் | 31-7-65 | 10-00 மு. ப. | கிராம சபை அலுவலகம், |

472

# வரி விளம்பரம்

### இடமாற்றம்

உரும்பிராயில் இருந்த சித்த ஆயுர்வேத டாக்டர் S A இராசையா L.I.M., ஆவணி முதல் நல்லூர் செம்பியன் ஜே. 174 நீர், வீட்டில் வசிப்பார். வைத்தியம் செய்யவேண்டியவர்கள் கலந்துகொள்ளலாம். 657

### கல்வி

G A Q E., G. S. Q E. வகுப்புகள், யாழ் பாணம சிங்கள மகாவித்தியாலயத்தில் சனி ஞாயிற்றுக்கிழமையில் நடைபெறுகிறது சேரவிரும்புவோர் உடனடியாகச் சேரவும்.

விண்ணப்பிக்கவும்:- சி. எஸ். இராசரத்தினம், சோமாஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர் 686

### தேவை

எல்லா ஊர்களிலும் எமது ஸ்தாபனத்தில் கன்வசராகக் கடமையாற்றக்கூடியவர்களும், ஸ்தாபன காரியாலயத்தில் லிகிதராகக் கடமைபுரியக்கூடியவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். திநாஷனல் ருஸ் கோப்பரேசன், 85, முதலாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். 680

கைதடி, மூன்றுந்தர உதவி ஆங்கில செவியர் குருபர் பாடசாலைக்கு, ஆங்கிலத்திலும், தமிழிலும் பயிற்றப்பட்ட தராதரபத்திரம் பெற்ற ஆசிரியர்கள் தேவை. பதவி நிலையானதும், ஓய்வுச் சம்பளம் தருவதுமாகும் அடிப்படைச் சம்பளத்தில்10% கூட்டி அரசாங்க விகிதத்தில சம்பளமும், அலவன்ஸும் கொடுக்கப்படும். அநுபவமுள்ள, ஆங்கிலத்தில் அல்லது கணிதத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியர் விரும்பத்தக்கவர், பிற பாடசாலைகளிலிருந்து மாற்றலாகி வரலாம். விபரங்களுடன் 7-8-65க்கு முன்னர் விண்ணப்பிக்கவும், அதிபர். 689

## இணைப்பு நிலையம் அமைக்குக

புத்தளம். வியாழன்

"ஒழுங்கான ஒரு தொலைபேசி இணைப்பு நிலையம் புத்தளத்தில் இல்லாத காரணத்தால், அவசர தேவைகளுக்கு தொலைபேசித் தொடர்பு கொள்வதில் மிகுந்த கஷ்டம் ஏற்படுகிறது எந்த ஒரு தேவைக்கும் சிலாபம் தொலைபேசி இணைப்பு நிலையத்தையே எதிர்நோக்கவேண்டியிருக்கிறது புத்தளத்தில் அநேகமாக எல்லா அரசாங்க இலாகாக்கள் இருந்தும் சரியான தொலைபேசி வசதி இல்லாதிருப்பது கவலைக்குரியதே, எனவே இப்பகுதி மக்களின் குறைகளை உணர்ந்து உடனடியாக புத்தளத்தில் ஒரு தொலைபேசி இணைப்பு நிலயத்தை ஏற்படுத்தக் கரும்படி கோருகிறோம்" மேற்கண்ட மகஜரை புத்தளம் மக்கள் தபால்தந்தி அமைச்சருக்கும், புத்தளம் பிரதிநிதியும் உதவி நீதி அமைச்சருமான ஜனாப் எச். எம். நயினா மரக்கார்க்கும் அனுப்பிவைத்திருக்கின்றனர்.

### WANTED

Wanted part time secretary with a minimum of 100 words in short hand 40 words in type writing apply Box 637 689

### விற்பனைக்கு

போயின் கொட்டகை ஒன்று விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு 83 A பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 688

## இராணுவத்தினர்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

எதிரிகளின் வழக்கறிஞரின் கேள்வி ஒன்றுக்கு சாட்சி பதிலளிக்கையில் "அறைக்குள் போனவரை மாத்திரம் அடையாளம் காட்ட முடியும் என்று பொலிசாருக்குச் சொன்னேன்" என்றார்.

### இன்ஸ்பெக்டர் சாட்சியம்

பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ரட்ணுபக்ச சாட்சியமளிக்கையில் கூறியதாவது-

5-7-64 அன்று மாலை நான் சாவகச்சேரிப் பொலிஸ்நிலையத்தில் இருந்தேன். யாழ்ப்பாணம் ஏ. எஸ். பி. உடனடியாகப் பளைக்குச் செல்லுமாறு டெலிபோனில் உத்தரவிட்டதைத் தொடர்ந்து நான் பளைக்குச் சென்றேன், அங்கு பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய பொலிஸ் சார்ஜண்ட் கிருஷ்ணரைச் சந்தித்தேன். அவருடன் கதைத்துவிட்டு அவரும் நானும் இயக்கச்சி இராணுவமுகாமிற்குச் சென்றோம். முகாமில் முதலாம் எதிரியைச் சந்தித்தேன்,

### வாகனங்கள்பற்றி தகவல்தர மறுத்தனர்

அவரிடம் எனது வருகையின் காரணம்பற்றித் தெரிவித்து அங்குள்ள இராணுவ வாகனங்கள் சம்பந்தமான தகவல்களைத் தருமாறு கேட்டேன். அவர் மறுத்துவிட்டார். பின்னர் அங்கிருந்து தாளையடிக்குப் போனேன். தாளையடி, செம்பியன்பற்றில் தேவாலயத்தருகே சாம்பிலையும் பருத்தித்துறை எம் பி திரு. துரை ரத்தினத்தையும் சந்தித்தேன், சேதங்களையும் பார்வையிட்டேன் புகைந்துகொண்டிருந்த ஒரு வீட்டிற்குள் எண்ணெய்த் தகரங்கள் இருந்ததையும் கண்டேன். தாக்குதல் காரணமாக காயமடைந்தவர்களை சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தேன்.

### குறுக்கு விசாரணை

எதிரிகளின் வழக்கறிஞரின் குறுக்குவிசாரணையின் போது இன்ஸ்பெக்டர் தான் இயக்கச்சி இராணுவமுகாமிற்குச் சென்றபோது அங்கு முதலாம் எதிரியைத் தவிர 50, 60 இராணுவத்தினரும் நின்றதாக கூறினார்.

அந்தோனி செபமாலை சாட்சியமளிக்கையில் கூறியதாவது-

"சம்பவம் நடந்த 5-7-64 அன்று மத்தியானம் 2 மணி போல நான் வீட்டிலிருக்கும் போது இரண்டு இராணுவத்தினர் வந்து தடியால் எனது

6-ம் பக்கம் பார்க்க

# ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்

## ரயில்முன் வீழ்ந்து தற்கொலை

யாழ்ப்பாணம், வியாழன்

எட்டுப் பிள்ளைகளுக்குத் தந்தையும், ஏற்கனவே இருமுறை தற்கொலை செய்யப்போவதாக மனைவிக்குப் பயமுறுத்தியவருமான ஒருவர், 'யாழ்தேவி'க்கு முன்னால் சென்று 'சலூட்' அடித்தபின் தற்கொலைசெய்து கொண்ட சம்பவம் நேற்று கந்தர்மடத்தில் நடந்துள்ளது.

கொட்டடியைச் சேர்ந்த 45 வயதுடைய ஏ. கே. சுப்பிரமணியம் என்பவரின் மரண விசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது. மரணவிசாரணை நடத்திய யாழ்ப்பாணநகரப்பகுதி மரண விசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் பிரேத பரிசோதனை நடத்துமாறு சட்டவைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டார். மரணவிசாரணை நடத்திய சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ் சுப்பிரமணியம் பல காயங்களினால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் மரணமானார் என்று தெரிவித்தார்.

காலஞ்சென்றவரின் மனைவி தனலட்சுமி சாட்சியமளிக்கையில் கூறியதாவது: "காலஞ்சென்றவர் எனது கணவர். மூன்று நாட்களுக்கு முன் சுகவீனம் காரணமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். நேற்று காலை அவரைப் போய்ப் பார்த்தேன். இன்று பிற்பகல் 3 மணியளவில் கந்தர்மடத்தில் எனது கணவர் புகையிரதத்தில் அடிபட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். இதற்கு முன்பும் அவர் தற்கொலைசெய்யப்போவதாக என்னைப் பயமுறுத்தியிருக்கிறார். எங்களுக்கு 8 பிள்ளைகள் உண்டு. கணவர் ஆஸ்பத்திரியிலிருந்து எப்படிக் கந்தர்மடத்திற்கு வந்தாரென்று எனக்குத் தெரியாது.

எனது கணவருக்கு கொழும்பில் ஓர் அரிசி மில் இருந்தது. அவர் அந்த மில்லை விற்றுவிட்டு யாழ்ப்பாணம் வந்தார். அதன்பின் அவர் பணமின்றிக் கஷ்டப்பட்டதோடு கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்."

'யாழ்தேவி' என்ஜின் சாரதி சொக் சாட்சியமளித்தபோது கூறியதாவது: "நான் காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்ட புகையிரதத்தில் சாரதியாக இருந்தேன். கோண்டாவிலுக்கும், யாழ்ப்பாணத்திற்குமிடையில் ஒருவர் பிரதான வீதியிலிருந்து புகையிரதப்பாதையை நோக்கிவருவதைக் கண்டேன். அவர் கரையோரத்தில் நின்று புகையிரதத்தைப் பார்த்தவண்ணமிருந்தார். அவர் புகையிரதப் பாதையைக்கடப்பதற்காக நிற்கிறாரென்று நான் கருதினேன்.

புகையிரதம் அவருக்கு 25 யார் தூரத்தில் சென்றதும், அவர் நேராகப் புகையிரதப் பாதைக்கு வந்து, நேராக என்ஜினை நோக்கினார். பின்பு புகையிரதம் அவரை நெருங்கிக்கொண்டிருந்தசமயம் என்ஜினுக்கு சலூட் அடித்துவிட்டு உடனே பாய்ந்தார். நான் உடனடியாகப் புகையிரதத்தை நிறுத்துவதற்கு பிரேக் போட்டேன். ஆனால் அவரை மோதுவதிலிருந்து தடுக்கமுடியாமலிருந்தது. 160 யாருக்கு அப்பால் புகையிரதம் சென்று நின்றது. நான் 'காட்'டிடம் நடந்தவற்றைக் கூறினேன். அவர் தேவையான நடவடிக்கைகளை எடுத்தார். நான் யாழ்ப்பாணம் புகையிரதநிலையத்திற்குச் சென்று விபரத்தைக் கூறினேன். அந்த நேரம் புகையிரதம் 45 மைல் வேகத்தில் சென்றது."

வேலாயுதபிள்ளை சண்முகராசா (காட்) சாட்சியமளித்தபோது, கோண்டாவிலுக்கும், யாழ்ப்பாணத்திற்கு மிடையில் புகையிரதம் சடுதியாக நிறுத்தப்பட்டது. என்ஜின் சாரதி விபரத்தை என்னிடம் கூறினார். புகையிரதத்தில் அடிபட்டவனின் சடலத்தை நான் பார்த்தேன். அவரின் உடல் துண்டுதுண்டாகப் பல இடங்களிலும் வீசப்பட்டிருந்தது. ஒரு தொழிலாளியின் உதவியைக்கொண்டு துண்டுகளையெல்லாம் ஓரிடத்தில் சேர்த்து வைத்தேன். பின்னர் இரு தொழிலாளரின் உதவியைக் கொண்டு சடலத்தைச் சுத்தம் செய்து யாழ்ப்பாணம்கொண்டு வந்தேன் என்றார்.

காலஞ்சென்றவர் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டாரா? அப்படியானால் எப்போது அனுமதிக்கப்பட்டாரென்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் விசாரணைசெய்யுமாறு மரணவிசாரணை அதிகாரி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

விசாரணைசெய்த பொலிசார் காலஞ்சென்றவர் ஆஸ்பத்திரியிலிருந்து செல்ல அனுமதிக்கப்படவில்லை யென்றும் அவரை ஆஸ்பத்திரியில் காணவில்லையென்றும் தெரிவித்தனர். காலஞ்சென்றவர் ஆஸ்பத்திரியில் காணமற்போனதும், அவரின் விபரங்களைத் தெரிவித்து நாடெங்கும் ரேடியோ செய்தியனுப்பப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தற்கொலையெனத் தீர்ப்பளித்தமரணவிசாரணை அதிகாரி காலஞ்சென்றவர் எப்பொழுது ஆஸ்பத்திரியிலிருந்து காணமற்போனாரென்றும், எப்பொழுது நாடெங்கும் ரேடியோ செய்தியனுப்பப்பட்டதென்றும் அவர் காணமற்போனது பற்றிச் சொந்தக்காரர்களுக்கு ஏன் அறிவிக்கவில்லையென்பது பற்றியும் விசாரணைசெய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

---

# பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று வெள்ளிக்கிழமை மாலை வண்ணை வைத்தீஸ்வர தேவஸ்தானத்தில் ஸ்ரீமத் வி. எஸ்.எஸ். மணிபாகவதர் 'மகாபாரத கதாப்பிரசங்கத் தொடர்ச்சி நல்லூர் கிழக்கு முத்த விநாயகராலயத்தில் பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம்- பெரியபுராணத் தொடர்ச்சி. நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் திரு த. சுப்பிரமணியம் பெரியபுராண தொடரில் பெய்பொருள் நாயனார்

---

# கல்விமந்திரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அகில இலங்கை அரசினர் தமிழ் ஆசிரியர் சங்கம் அளிக்கும் இரவு போசன விருந்தில் கலந்து கொள்வார், இரவு 9 மணிக்கு புகையிரதத்தில் கொழும்புக்கு பிரயாணம்.

---

# கார்த்திகை திருவிழா

நயினாதீவு (?) ஊர்காவற்றுறை, வெள்ளி

புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ பால சுப்பிரமணிய தேவஸ்தானத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை மாதாந்த கார்த்திகைத் திருவிழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது. அபிஷேகமும் சுவாமி வீதி வலம் வரும் காட்சியும் நடைபெறும்.

---

# "பொலிசார் முற்றுகை"

கொழும்பு, வியாழன்

'டெல்வற்' இறங்குதுறையில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்த இடம் தற்பொழுது ஆயுதம் தாங்கிய பொலிசாரினால் முற்றுகையிடப்பட்டுள்ளது. இறங்குதுறையில் எதிர்க்கட்சி தொழிலாளர்களுக்கிடையில் ஏதும் அசம்பாவிதங்கள் ஏற்படாது தடுப்பதற்காகவே பொலிசார் இவ்விதமாக காவல்புரிந்து வருகின்றனர்.

துறைமுகத் தொழிலாளர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்பிவர வேண்டுமென்றும் கூட்டங்களில் உத்தரவின்றி பேசக் கூடாது என்றும் அப்படி செய்யின் அவர்கள்மீது ஒழுங்குநடவடிக்கை எடுக்கப்படுமென்றும் எச்சரிக்கை செய்யும் விளம்பரங்கள் இறங்குதுறையில் ஒட்டப்பட்டிருந்தன. கடும் பந்தோபஸ்து நடவடிக்கைகளும் பொலிசாரினால் இன்று காலை மேற்கொள்ளப்பட்டது.

---

# இராணுவத்தினர்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இடது கையில் அடித்துத் கையை முறித்தனர், அவர்கள் ரோட்டில் நிற்பாட்டப்பட்டிருந்த இராணுவ வானில் இருந்து இறங்கி வந்தனர். அவர்களைத் தவிர வேறு பலரும் அதிலிருந்து இறங்கியதையும் கண்டேன் எனக்கடித்த இருவரும் காக்கி நிற கட்டைக் காற்சட்டையும் வெள்ளை நிற பெனியனும் அணிந்திருந்தனர், அவர்கள் இருவரும் தடியால் எனக்கு அடித்தனர். அந்த அடியின் களைப்பால் நான் அப்படியே முற்றத்தில் படுத்துவிட்டேன். அதனால் அவர்கள் திரும்பி எங்கு போனார்கள் என்று தெரியாது. சம்பவம் திடீரென நடைபெற்றதால் அவர்களை அடையாளம் காட்ட முடியவில்லை. இப்பொழுதும் அவர்களை அடையாளம் காட்ட முடியாது".

## அடையாளம் தெரியாது

எதிரிகளின் வழக்கறிஞரின் குறுக்குவிசாரணையின்போது சாட்சி தன்னைத் தாக்கியவர்கள் சம்பந்தமான அடையாளத் இப்போதும் சொல்லத் தெரியாது என்றார்.

மேல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## குற்றச்சாட்டுகள்

இவ்வழக்கில் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடி குழப்பம் செய்ததாகவும், தாழையடி வாசிகளான மரியாம்பிள்ளை பெனடிக்ற், அந்தோனி செபமாலை, அ. பத்திநாதர் ஆகியோருக்கு அடித்துக் காயம் விளைவித்ததாகவும், பிலிப்பு மோசேஸ் என்பவரின் இரண்டு வீடுகளுக்கும், சி. மரியாம்பிள்ளை என்பவரின் வீட்டிற்கும் சேதம் விளைவித்ததாகவும், அ. செபமாலையின் வீட்டிற்கும் உடமைகளுக்கும் 8000 ரூபாய் கஷ்டமும், பி. பேதுருப்பிள்ளையின் வீட்டிற்கும் உடமைகளுக்கும் 600 ரூபா நஷ்டமும், அருளம்பலம் மத்திநாதரின் காருக்கு 2000 ரூபா நஷ்டமும் விளைவித்ததாக இயக்கச்சி இராணுவ முகாமைச் சேர்ந்த ஒரு லெப்டினட் குமாரசாமி உட்பட மத்தொன்பது இராணுவத்தினர் மீது பளை பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. டி சென்ற் ஜேம்ஸ் (?) ஜேயினால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு கே வி எஸ் சண்முகநாதன் திரு சி பாலகிருஷ்ணனின் உதவியுடன் ஆஜரானார்.

வழக்கு விசாரணையைப் பார்ப்பதற்காக நீதமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் மாணவர்கள் உட்படப் பலர் குழுமியிருந்தனர்.

---

# தொழில் மந்திரி இன்று வவனியா விஜயம்

வவனியா, வியாழன்

தொழில் வீடமைப்பு மந்திரி ஜனாப் எம். ஏச். மகமதும், உதவி நிதி மந்திரி ஜனாப் நைனா மரக்காரும் நாளை வெள்ளிக்கிழமை முகமது நபி ஜயந்தி விழாவில் கலந்து கொள்வதற்காக வவனியாவிற்கு விஜயம் செய்யவிருக்கிறார்கள்.

யாழ்தேவியில் காலை 10-45 மணிக்கு வவனியா புகையிரத நிலையம் வந்தடையும் மந்திரியையும் உதவி மந்திரியையும் வவனியா மீலாத் சபையினர் வரவேற்பார்கள்.

இதே யாழ்தேவியில் பிரயாணம செய்யும் கல்வி கலாச்சார மந்திரி திரு இரியகொல்லையும், அவரது பாரியாரும் நேராக யாழ்ப்பாணம் செல்வார்களென்று தெரியவருகிறது.

தொழில் வீடமைப்பு மந்திரி திரு முகமதவும், உதவி நிதி மந்திரி திரு நைனா மரைக்காயரும் பகல் 11 மணிக்கு பள்ளிவாசலுக்கு செல்வார்கள் பகல் 12-30 மணிக்கு தொழுகையில் கலந்து கொள்வார்கள்.

பிற்பகல் 1 மணிக்கு வவனியா அரபிக் கல்லூரிக்கட்டடத்திற்கு மந்திரி அடிக்கல் நாட்டுவார்

பிற்பகல் 4 மணிக்கு வவனியா திறந்தவெளி அரங்கில் பொதுக்கூட்டம் நடைபெறும், இக்கூட்டத்தில் முன்னாள் வவனியா எம்.பி. யும் ஈழமுன்னணித் தலைவருமான திரு வி சுந்தரலிங்கம் முக்கிய பேச்சாளராக கலந்துகொள்வார்.

வவனியா எம் பி திரு எம் சிவசிதம்பரம், பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு எம் எம் அப்துல்காதர், சகிரா கல்லூரி விரிவுரையாளர் திரு ஏ ஆர் எம் சுபையிர், முதலியார் எஸ் சின்னத்தம்பி, வவனியா விகாரை பொறுப்பாளர் எம் ஒளுகந்தேதரோ ஆகியோரும்சொற்பொழிவாற்றுவார்கள.

---

# ரூபா 35,000...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலெக்டர் திரு ஆனிலிடம் ஒப்படைத்தார், திரு ஆனிலை கைப்பற்றப்பட்ட பொருளை பறிமுதல் செய்யும்படி உத்தரவிட்டு கடத்தலில் ஈடுபட்டவர்களுக்கு 45 000 ரூபா அபராதம் விதித்தார்

---

# வட்டுக்கோட்டையில் இசை விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

வட்டுக்கோட்டை சங்கீத அபிவிருத்தி சங்கத்தினர் தங்கள் முதலாவது ஆண்டு இசைவிழாவை அடுத்த மாதம் 18-ம், 19-ம், 20-ம், 21-ம், 22-ம் திகதிகளில் வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன் கோவில் மேற்கு ரத வீதியில் கொண்டாட விருக்கிறார்கள்,

---

# திருட்டு வழக்கில் எதிரி விடுதலை

சாவகச்சேரி, வியாழன்

துனுவிலைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை என்பவரின் வீட்டில் சுமார் 800 ரூபா பெறுமதியான நகைகளையும், பணத்தையும் திருடியதாக க. விநாயகமூர்த்தி என்பவர் மீது குற்றம் சாட்டி சாவகச்சேரிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. தேவநாயகத்தினால் சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் பின்னர் நீதிபதி சுபி ஜெபோர்ட்சில்வா எதிரியைச் சுற்றவாளியாகக் கண்டு வழக்கைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார்.

எதிரிக்காக திருவாளர்கள் எஸ். கந்தசாமி, சி. பாலகிருஷ்ணன் ஆகியோரின் உதவியுடன் திரு. கே. ஜெயக்கொடி ஆஜரானார்.

---

# எச்சரிக்கை!

கொழும்பு. வியாழன்

வேலைநிறுத்தம் நடைபெறும் 'டெல்வற்' இறங்குதுறையில் இன்றுமாலை வழக்கம்போல வேலை நடைபெற்றன என்றும் 90 சதவிகித தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர் என்றும் துறைமுககார்ப்பரேஷன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாளை வேலைக்கு வராத தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்படுவார்கள்என்று துறைமுககார்ப்பரேஷன் தலைவர் எச்சரிக்கை செய்துள்ளார்.

---

# கதாப்பிரசங்கங்கள்

இரவு 8 மணி முதல் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் திருப்புகழ் மண்டபத்தில் "சங்கைவேடனும் காளத்திவேடனும் என்னும் சரிதையும் இரவு 10 மணிமுதல் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமிகோவில் கார்த்திகை மகோற்சவத்தில் "மெய்யாமெய்யும் மெஞ்ஞான பண்டிதனும்" என்னும் பொருள்பற்றியும முத்தமிழ்மணி சி. எஸ். எஸ் மணிபாகவதர் கதாகாலஷேபஞ்செய்வார்.

---

# இலவச படக் காட்சி

தொல்புரம், வெள்ளி

இன்று பிற்பகல் தொல்புரம் மத்திய சனசமூக நிலைய வாசிகசாலையில் விவசாயம், கோழிப்பண்ணை சம்பந்தமான இலவச படக்காட்சி காண்பிக்கப்படும்.

---

# உருளைக்கிழங்கு

## அடுத்தவாரம்கிடைக்கும்

கொழும்பு, வியாழன்

ஜேபானத்திலிருந்து அடுத்த வாரத்திலிருந்து 2 ஆயிரம் டன் உருளைக்கிழங்கு இங்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதிருந்துவரும் உருளைக்கிழங்குத் தட்டுப்பாடு இந்த உருளைக்கிழங்கு இறக்குமதியானபின் நீங்கிவிடுமென நம்பப்படுகிறது.

---

# சாஸ்திரிக்கு கறுப்புக்கொடி

இந்தியப்பிரதமர் திரு. சாஸ்திரி இன்று பங்களூர் வந்து சேர்ந்தபோது விமானநிலையத்திலும், வழியில் சில இடங்களிலும் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நேருவின் விருப்பப்படி கோவா 10 ஆண்டுகளுக்கு யூனியன்பிரதேசமாக இருக்கவேண்டும் என அவர்கள் கோஷமிட்டனர். ஓரிடத்தில் 500 மாணவர்கள் திரு. சாஸ்திரியின் காரை மறிக்க முயன்றனர். ஆனால் பொலிஸார் அவர்களைக் கலைத்து, பிரதமரின்கார் தொடர்ந்துசெல்ல வழிவகுத்தனர்.

---


# மரண அறிவித்தல்

## சின்னுச்சிப்பிள்ளை

காலஞ்சென்ற சின்னக்குட்டியின் அருமை மனைவியும், மூளாய் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த "ஸ்டோர்கீப்பர்" ஆறுமுகசாமி, தையல்நாயகி சிவபாக்கியம் ஆகியோரின் அன்புத் தாயாரும் ரோமிலோ பாடசாலை அதிபர் சிவபாக்கியத்தின் மாமியாருமான பண்ணாகம் தெற்கைச் சேர்ந்த சின்னுச்சிப்பிள்ளை காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று பகல் பன்னிரண்டு மணிக்கு திருவடி நிலைக்கு எடுத்துச்செல்லப்படும். 690


---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.